# இடம் பொருள் கலைஞர்

77

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம்!**



# பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம்!

*ச*மூகம்- பொருளாதாரம்- குடும்பம் என அனைத்துத் தளங்களிலும் சமஉரிமை பெற்றவர்களாக, பெண்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இந்தியத் துணைக்கண்டத்தில் மற்ற எவருக்கும் முன்பே திராவிட இயக்கத்திற்கு உருவானது. பெரியார் சுயமரியாதை இயக்கம் கண்ட, அடுத்த சில ஆண்டுகளில் இருந்தே பெரியாரின் எழுத்துக்களிலும், பேச்சுக்களிலும் பெண்ணுரிமைக் குரல் தவிர்க்காமல் இடம்பெற்று வந்தது.

பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துக்களின் நோக்கம் ஒன்றுதான். 'ஆணுக்கும் பெண்ணுக்கும் உடல் ரீதியான மாற்றங்களைத் தவிர, வேறென்ன வேறுபாடு இருக்கிறது, எதற்காக ஆண் அதிகாரம் பெற்றவனாகவும், பெண் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுபவளாகவும் இருக்க வேண்டும்?' என்பதுதான் பெரியாரின் கேள்வி. அந்தக் கேள்விக்கான விடையையும் அவரே விளக்கியிருக்கிறார். "ஆதிக்கமும் அடிமைத்தனமும் நிறைந்தது இச்சமூகம். மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும்தான் இரண்டும் நிலைநிறுத்தப்படுகிறது. அதற்கு பெண் மீதான அடக்குமுறை தேவைப்படுகிறது. அதற்காகவே, பெண் புனிதமாக்கப்படுகிறாள். அடக்குமுறையில் இருந்தும், புனிதத்தன்மையில் இருந்தும் பெண் விடுவிக்கப்பட்டு அதிகாரம் பெற்றவள் ஆகும்போதுதான் ஆதிக்கமற்ற - அடிமைத்தனமற்ற சோசலிச சமூகம் உருவாகும்" என்பதே பெரியாரின் பெண் விடுதலைக் கோட்பாடு.

பெண், அதிகாரம் பெற்றவளாக வேண்டுமென்றால், இரண்டு முக்கிய ஆயுதங்கள் கல்வியும், பொருளாதாரமும். நூற்றாண்டுக்கு முன்புவரை பெண்களுக்கு இரண்டுமே மறுக்கப்பட்டிருந்தன. அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்த பெரியாரின் சிந்தனையே, பின்னாளில் திராவிட இயக்கத்தின் சித்தாந்தமானது.

## முதல் விதை!

அண்டம் உருவாகக் காரணமான பெருவெடிப்பு போல, தமிழ்நாட்டில் சுயமரியாதை உணர்வு ஊற்றெடுக்கக் காரணமான முக்கிய நிகழ்வு, **1929-ஆம் ஆண்டு செங்கல்பட்டு 'முதல் சுயமரியாதை மாநாடு'**. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பெண்ணுரிமைக்கான புரட்சிகரத் தீர்மானங்களே அதற்கு சாட்சியமாகத் திகழ்கின்றன.

பெண்கள் பருவமெய்துவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கும் பழக்கம் நடைமுறையில் இருந்த அந்தக் காலத்தில், 'பெண்கள் திருமண வயதை 16-ஆக உயர்த்த வேண்டும். பெண்களுக்குக் கலப்பு மண உரிமை, விவாகரத்து உரிமை, மறுமண உரிமை வழங்கப்பட வேண்டும். சொத்துரிமை; உத்தியோக உரிமை வழங்கப்பட வேண்டும்' என்று செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெரியார் தீர்மானம் நிறைவேற்றினார். அப்போது, முத்தமிழறிஞர் கலைஞருக்கு வயது ஐந்து. ஆனால், அப்போது யாருக்கும் தெரிந்திருக்காது. பெரியாரின் இந்தப் புரட்சிகரச் சிந்தனைகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞரே செயல்வடிவம் கொடுக்கப்போகிறார் என்று.




## முந்தைய சட்டங்கள்!

மதம் மற்றும் சமூகத்தின் அடிப்படையில் பெண்கள் சொத்தில் உரிமை கோர முடியாது என்பதுதான், 1937-ஆம் ஆண்டு வரை இருந்த நிலைமை. சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தால் 1937-ஆம் ஆண்டில் இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், கணவன் உயிரோடு இருக்கும் வரை பெண்கள் சொத்துக்கு உரிமைதாரர் ஆக முடியாது. ஒருவேளை மனைவிக்கு முன்பே கணவர் இறந்துவிட்டால், அவருடைய சுய சம்பாத்திய சொத்துகளிலும், பங்குரிமைச் சொத்திலும் மனைவிக்கு உரிமை வழங்கப்பட்டது. ஆனாலும், அவை நடைமுறையில் பெரும்பாலும் மகன்களுக்கே சென்றன. அடுத்து, 1956-ஆம் ஆண்டு வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. இதில் பரம்பரைச் சொத்து மற்றும் கூட்டுக் குடும்பச் சொத்தில் பெண்கள் உரிமை கோர முடியாது. எனவே, இந்த இரண்டு சட்டங்களும் பெண்ணினத்திற்கான முழுமையான நீதியைத் தருவதாக இல்லை.

'பரம்பரைச் சொத்தில் பெண்ணுக்கும் சமபங்கு கொடுக்கப்படும்போதுதான் ஆணும் பெண்ணும் சமம் என்ற உணர்வு ஆண்கள் மத்தியிலும் ஏற்பட வழிவகுக்கும். எனவே அத்தகையதொரு சட்டத்தை உருவாக்கும் நாள் எந்நாளோ?' என்பதே பெரியாரின் ஏக்கமாக இருந்தது. புரட்சியாளர் அம்பேத்கருக்கும் அதுவே எண்ணமாக இருந்தது. ''பெண்களுக்குச் 'சீதனம்', 'வரதட்சணை' ஆகிய பெயர்களில் கொடுக்கப்படும் வேறுபட்ட நடைமுறைகள் மாற்றப்பட்டு, அவர்களுக்குரிய சொத்து என்பது நடைமுறைக்கு வர வேண்டும்" என்று 1950-ஆம் ஆண்டில் புரட்சியாளர் அம்பேத்கர், நாடாளுமன்றத்தில் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தார். ஆனால், பலத்த எதிர்ப்புகளால் அந்தச் சட்ட முன்வடிவு முறியடிக்கப்பட்டது.

**விலக்கி வைக்கப்பட்டவர்கள் என்ற சமூகத்தின் அநீதிப் பட்டியலில் இருந்து பெண்களை விடுவித்தார் கலைஞர்.**

## கலைஞர் வந்தார்!

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, தந்தை பெரியாரின் பேராதரவோடு கட்சிக்கும் ஆட்சிக்கும் தலைமையேற்ற முத்தமிழறிஞர் கலைஞர், பழமைவாத பாதகப் பழக்கங்களைப் படுகுழியில் தள்ளிடும் முயற்சிகள் பலவற்றை அடுத்தடுத்து மேற்கொண்டார். அதில் 1989-ஆம் ஆண்டில் அவர் மேற்கொண்ட முயற்சிதான் 'பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு' என்ற சட்டம். 1956-ஆம் ஆண்டுக்கான வாரிசுரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்து, பெண்களுக்கும் ஆண்களைப் போல பரம்பரைச் சொத்தில் சமபங்கு வழங்க வேண்டுமென்று, சட்ட முன்வடிவு சட்ட மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பொன்னம்மாள், மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பாப்பா உமாநாத், தி.மு.க. உறுப்பினர்கள் காஞ்சனா கமலநாதன், சற்குணம், சாந்தகுமாரி ஆகியோர் சட்டத்தை ஆதரித்து, வரவேற்றுப் பேசினர்.

அப்போது சட்டமன்றத்தில் பேசிய கலைஞர், "1929-ஆம் ஆண்டில் செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தை 60 ஆண்டுகள் கழித்து, என்னுடைய 65-வது வயதில் சட்டமாகக் கொண்டுவருகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன் என்பது எனக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அவைக்கும் பெருமை சேர்க்கக்கூடியது. என்றாலும்கூட, சற்றொப்ப 60 ஆண்டு காலம் நாம் தூக்கத்திலே இருந்திருக்கிறோம் என்பதையும் மறந்துவிடுவதற்கு இல்லை" என்று கூறி, சட்டத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு அவையினரைக் கேட்டுக்கொண்டார். சட்டமன்றத்தில் சட்டம் நிறைவேறியது. விலக்கி வைக்கப்பட்டவர்கள் என்ற சமூகத்தின் அநீதிப் பட்டியலில் இருந்து பெண்களை விடுவித்தார் கலைஞர்.

## வழிகாட்டிய திராவிடம்!

தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தை 16 ஆண்டுகளுக்குப் பிறகே, ஏற்றுக்கொள்கிற மன வலிமை ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் உருவானது. பெண்களுக்கும் சொத்தில் சமபங்கு வழங்க வழிவகை செய்யும் சட்டத் திருத்தங்கள், இந்திய சொத்துரிமைச் சட்டத்தில் 2005-ஆம் ஆண்டில்தான் மேற்கொள்ளப்பட்டது. அதனை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், 2020-ஆம் ஆண்டில் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், "பெண்களுக்கு சொத்து வழங்குவது சட்டபூர்வமான உரிமை" என்று தீர்ப்பளித்தனர். வரலாற்றில் எத்தனையோ பொன்னெழுத்துக்களை, திராவிட இயக்கம் பதித்திருக்கிறது. அதில் 'பெண்களுக்கு சொத்தில் சமபங்கு' என்ற பொன்னெழுத்தை பெண்கள் பெறும் ஒவ்வொரு பட்டாவிலும் பதிய வைத்திருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர்.

**...வலம் வருவோம்**

## மோசடியே, உன் பெயர்தான் பா.ஜ.க.வா?




**ஊ**ழலுக்கும் வன்முறைக்கும் அப்பாற்பட்ட தூய்மையான கட்சியாக பா.ஜ.க. தன்னைக் காட்டிக்கொள்ளும். ஆனால், அடிப்படையில் பத்தாண்டுக் கால மோடி ஆட்சியில் 'ரபேல் ஊழல்' முதல் 'தேர்தல் பத்திரங்கள்' வரையிலான ஊழல் வரை பல குற்றச்சாட்டுகள் எழுந்தன. காந்தி படுகொலை முதல் சிறுபான்மையினர் மீதான தாக்குதல் வரை, வன்முறையே இந்துத்துவ அரசியலின் ரத்தக்கறை படிந்த சரித்திரம். 'இந்துத்துவம்' என்னும் அரசியலை மையமாக வைத்து நடக்கும் வன்முறைகளைத் தாண்டி சமூகவிரோதச் சக்திகளைத் தேடித்தேடி கட்சியில் சேர்ப்பதன் மூலம், இன்று கிரிமினல்களின் கூடாரமாக, பா.ஜ.க. விளங்குகிறது. ஆனால், மக்களுக்காகப் போராடும் போராளிகளைத் தேசத்துரோகிகளாகவும் வன்முறையாளர்களாகவும் சித்திரிப்பதில், பா.ஜ.க. கூச்சப்படுவதில்லை. அதேபோல் கிரிமினல்களின் கூடாரமாக விளங்கும் பா.ஜ.க. தலைவர்களோ 'தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை' என்ற பிம்பத்தைக் கட்டமைக்கப் படாதபாடு படுகின்றனர். இந்த நிலையில்தான் பா.ஜ.க.வின் குற்றப்பின்னணியைத் தொகுத்து 'பா.ஜ.க குற்றப்பட்டியல்' என்னும் பி.டி.எப் வடிவிலான வெளியீடு சமூகவலைத்தளங்களில் உலா வருகிறது.

தேசிய அளவில் அதானி போன்ற பெருமுதலாளிகளுக்குத் துணை நிற்பது முதல் தமிழ்நாட்டில் 'ஆருத்ரா' நிதி நிறுவன மோசடியில் பா.ஜ.க. நிர்வாகிகள் தொடர்பு வரை விவரிக்கும் கட்டுரைகளைப் படிக்கும்போது 'மோசடியே உன் பெயர்தான் பா.ஜ.க.வா?' என்று கேட்கத் தோன்றுகிறது. மேலும் பா.ஜ.க.வில் இணைந்துள்ள ரவுடிகள் பட்டியல், அவர்களின் மீதான வழக்குகளைப் படிக்கும்போது அந்தக் கேள்வி இன்னும் வலுவடைகிறது. தங்கள் சொந்தக்கட்சிக்காரர்களின் அந்தரங்க வீடியோக்கள் எடுத்து மிரட்டுவது முதல் அடுத்தவர் வீட்டு வாசல் முன் சிறுநீர் கழித்து மிரட்டுவதுவரை, குற்றங்களில் என்னென்ன வகையெல்லாம் உண்டோ, அவை அத்தனையும் செய்தவர்களாக பா.ஜ.க.வினர் இருக்கிறார்கள் என்பதை, இந்த பி.டி.எப் கட்டுரைகளைப் படித்தால் தெரியும்.

## ப்ளாஷ்பேக்





ரமேஷ் கண்ணா

**வானத்தைப் போல மனது!**

2000-ஆம் ஆண்டு 'வானத்தைப் போல' திரைப்படம் வெளியானது. இப்படத்தின் வெள்ளி விழாவை முன்னிட்டு, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. திரைப்படத்தில், பணியாற்றிய அனைவருக்கும் கேடயம் வழங்கி கௌரவித்தார் கலைஞர். நான் விருது வாங்க மேடையேறிய போது, திரைப்படத்தில் வரும் என்னுடைய நகைச்சுவைக் காட்சியைக் குறிப்பிட்டு 'என்னப்பா கிரைண்டரா?' என்றார். அப்படியான தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**–ரமேஷ் கண்ணா,**
**திரைப்பட நடிகர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### குலக்கல்வி எதிர்ப்பு - முதல் கைது!

1953-ஆம் ஆண்டு, அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த ராஜாஜி, 'புதிய கல்வித் திட்டம்' என்கிற பெயரில், பரம்பரைத் தொழிலைக் கற்றுக் கொள்ளும் திட்டத்தினை அறிவித்தார். இதனை தி.மு.கவும், திராவிடர் கழகமும் கடுமையாக எதிர்த்தன. மும்முனைப் போராட்டத்துக்கு முன்னர், சென்னையில் ஜூலை 8-ஆம் தேதி தொடங்கிய முற்றுகைப் போராட்டத்தில் 57 பேர் கைது செய்யப்பட்டனர். ஒன்பதாம் தேதி நடந்த போராட்டத்தில் 10 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த 67 பேரும், குலக்கல்விக்கு எதிராக நடந்த போராட்டங்களில் முதலில் சிறை சென்றனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

535

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131